RNI-NO: TNTAM/2021/83936




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை மலர்-5 இதழ்- 237 செப்டம்பர் 01, 2026 செவ்வாய்கிழமை malaithanthi2020@gmail.com 4 பக்கங்கள் விலை ரூ. 5

# தூத்துக்குடியில் புதிய அனல் மின் நிலையம் அமைக்கப்படும்: முதல்வர் விஜய் அறிவிப்பு

சென்னை: செப்.1-

தூத்துக்குடியில் சூப்பர் கிரிட்டிக்கல் அனல் மின் நிலையம் அமைக்கப்படும் என்று தமிழக சட்டப்பேரவையில் விதி எண் 110-ன் கீழ் முதல்வர் விஜய் அறிவித்தார்.

சட்டப்பேரவையில் முதல்வர் விஜய் பேசுகையில், "தமிழகத்தின் வளர்ந்துவரும் பொருளாதாரம் மற்றும் அதிகரித்துவரும் மின் நுகர்வு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, மின் உற்பத்தி, மின் தொடரமைப்பு மற்றும் மின் விநியோகத் துறைகளில் விரிவான மேம்பட்ட தொழில்நுட்பத்துடன் கூடிய உலகத்தரம் வாய்ந்த மின்கட்டமைப்பு அவசியமாகிறது. அதன்படி,

1. தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கட்டமைப்பு (Transmission) மேம்பாட்டுத் திட்டம்: மின் நுகர்வு தொடர்ந்து அதிகரித்து வருவதால், மின் உற்பத்தி நிலையங்களில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை சென்னை போன்ற முக்கிய மின் நுகர்வு மையங்களுக்குத் திறம்படக் கொண்டு செல்வதற்கான மின் தொடரமைப்பை மேம்படுத்துவது அவசியமாகிறது.

இதற்காக, அரசு தொலைநோக்குடன் 33 ஆயிரத்து 66 கோடி ரூபாய் மதிப்பீட்டில் "தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்" (Tamil Nadu Transmission Improvement Scheme) செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தின் கீழ் 196 புதிய துணை மின் நிலையங்கள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய 15 ஆயிரம் கிலோ மீட்டர் நீளமுடைய புதிய மின் பாதைகள் அமைக்கப்படுவதுடன், ஏற்கனவே உள்ள மின் பாதைகள் வலுப்படுத்தப்படும்.

2. தூத்துக்குடியில் New Supercritical Thermal Power Station அமைத்தல்: தமிழகம், புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறையில் முன்னணி மாநிலமாகத் திகழ்ந்து, காற்றாலை, சூரிய மின்சாரம் மற்றும் மின்கல சேமிப்பு போன்ற துறைகளில் தொடர்ந்து கவனம்



செலுத்தி வருகிறது என்றாலும், இந்த ஆற்றல் ஆதாரங்கள் சமச்சீராகக் கிடைப்பதில்லை.

தமிழகத்தில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தியில் இருந்து பெறப்படும் உபரி மின்சாரத்தை பேட்டரிகளில் சேமித்துவைத்து இரவு நேரங்களில் தேவைக்கேற்ப பயன்படுத்தும் தொழில்நுட்பம் தற்போது நிறுவப்பட்டு வருகின்றபோதிலும், தற்போதுள்ள கட்டமைப்பு அனைத்து நேரங்களிலும் உள்ள மின்தேவையைப் பூர்த்திசெய்ய இயலாது. எனவே, மின்தேவை அதிகமாக இருக்கும் காலங்களில் தடையற்ற மின்சாரத்தை வழங்க அனல்மின் உற்பத்தியையே பெரிதும் நம்பியிருக்க வேண்டியுள்ளது. ஆகவே, இதற்கான கட்டமைப்பை மேம்படுத்துவது மிகவும் அவசியமானது.

கடந்த ஐந்து ஆண்டுகளில் தமிழகத்தில் புதிய அனல் மற்றும் நீர்மின் நிலையங்கள் அமைப்பதற்குப் பெரிய அளவில் முதலீடுகள் மேற்கொள்ளப்படவில்லை. தொடர்ந்து அதிகரித்துவரும் மின் சுமையைத் திறம்பட கையாள்வதற்கும், மின் தேவையைப் பூர்த்தி செய்வதற்கும், மின் உற்பத்தித் துறையில் முதலீடுகளை மேற்கொள்வது இன்றியமையாதது ஆகும். தூத்துக்குடி அனல் மின் நிலையம் தமிழ்நாட்டின் முக்கிய அனல் மின் நிலையங்களில் ஒன்றாகும்.

இந்த நிலையத்தில் தற்போது தலா 210 மெகாவாட் திறன்கொண்ட ஐந்து நிலக்கரி அடிப்படையிலான உற்பத்தி அலகுகள் உள்ளன. இவற்றின் மொத்த நிறுவு திறன் ஆயிரத்து 50 மெகாவாட் ஆகும். இந்த அலகுகள் 1979-ஆம் ஆண்டு முதல் படிப்படியாக இயக்கப்பட்டு வருகின்றன. நிலக்கரி அடிப்படையிலான அனல் மின் நிலையங்களுக்குப் பொருந்தக்கூடிய சுற்றுச்சூழல் விதிமுறைகளுக்கு இணங்க, தற்போதுள்ள அலகுகளைப் படிப்படியாக மாற்றியமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.


தற்போதுள்ள ஐந்து, 210 மெகாவாட் அலகுகளைப் படிப்படியாக மாற்றியமைத்து, தூத்துக்குடி அனல் மின் நிலைய வளாகத்தில், பொது மற்றும் தனியார் கூட்டாண்மை (PPP) முறையில், தலா 800 மெகாவாட் திறன்கொண்ட இரண்டு அலகுகளுடன், மொத்தமாக ஆயிரத்து 600 மெகாவாட் திறன் கொண்ட ஒரு New Supercritical Thermal Power Station 20 ஆயிரத்து 800 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படும்.

3. மின் பகிர்மானக் கட்டமைப்பு (Distribution) மேம்பாட்டுப் பணிகள்: சென்னை மாநகரின் மின்தேவையைப் பூர்த்தி செய்ய வலுவான மின் பகிர்மானக் கட்டமைப்பு அவசியமாகும். சென்னையில் பருவ மழைக்காலங்களில் வெள்ளம் தொடர்பாக ஏற்படும் மின்தடைகளையும், கோடைக்காலங்களில் அதிக மின் தேவை காரணமாக ஏற்படும் சவால்களையும் சந்திக்க வேண்டியுள்ளது.

இதனைக் கருத்தில் கொண்டு, 36 புதிய 33 By 11 (33/11) கிலோ வோல்ட் துணை மின் நிலையங்கள் அமைத்தல், புதிய மின் பகிர்மான மின்மாற்றிகளை நிறுவுதல், சேதமடைந்த மற்றும் பயன்பாட்டுக் காலம் நிறைவடைந்த கேபிள்கள், மின்கடத்திகள், Pillar Box, Circuit Breakers உள்ளிட்ட உபகரணங்களை மாற்றுதல் போன்ற பணிகள் ஆயிரத்து 762 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



■ தமிழ்நாடு முதலமைச்சர் ச.ஜோசப் விஜய் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், விதி எண் 110-ன் கீழ், பால் உற்பத்தியாளர்கள் பயனடையும் வகையில் பால் கொள்முதல் விலையை 44 ரூபாயாக உயர்த்தியும், எரிசக்தித் துறை சார்பில் புதிய மின்கட்டமைப்புகள் அமைப்பது தொடர்பாகவும், காஞ்சிபுரம் மாவட்டத்தில் செமிகண்டெக்டர் மற்றும் மின்னணுவியல் உற்பத்திப் பூங்கா, கோயம்புத்தூரில் டிஜிட்டல் நிதி மையம் மற்றும் திருச்சிராப்பள்ளி மண்டலத்தில் பல்முனை சரக்குப் போக்குவரத்து மையம் அமைப்பது தொடர்பாகவும் அறிவிப்புகளை வெளியிட்டார்.




■ மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், ஆவின் நிறுவனம் சார்பில் செயல்படுத்தப்படும் சிறு பால் பண்ணை அமைக்கும் திட்டத்தின் கீழ், 4 கறவை மாடுகள் வாங்குவதற்காக ரூ.2.70 இலட்சம் மானியத்துடன் கூடிய வங்கிக் கடன் உதவி பெறுவதற்கான காசோலையை பயனாளிகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் நிஷாந்த் கிருஷ்ணா வழங்கினார்.



■ மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் மற்றும் மூத்த குடிமக்களுக்காக அமைக்கப்பட்டுள்ள சிறப்பு அமருமிடத்திற்குச் சென்று, மாவட்ட ஆட்சித்தலைவர்நிஷாந்த் கிருஷ்ணா கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார்.

# காணாமல் போன உறவுகளைத் தேடி நேபாளம் செல்வோருக்கு உதவ சிறப்புக் குழு: தமிழக அரசு

சென்னை: செப்.1-

நேபாளத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் சிக்கி காணாமல் போனவர்கள் குறித்த விவரங்களை அறிய காத்மாண்டு செல்லும் உறவினர்களுக்கு உதவ தமிழ்நாடு அரசு சார்பில் 3 அலுவலர்கள் கொண்ட குழு அறிவிக்கப்பட்டுள்ளது. இக்குழு காத்மாண்டுவில் முகாமிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், "நேபாளத்துக்கு சுற்றுலா சென்றபோது, 26 ஆகஸ்ட் 2026 அன்று போட்டேகோஷி ஆற்றில் ஏற்பட்ட திடீர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தமிழ்நாட்டை சேர்ந்த சுற்றுலாப் பயணிகள், குறிப்பாக பாதிக்கப்பட்ட பகுதிகளில் காணாமல் போனதாகவோ அல்லது சிக்கித் தவிப்பதாகவோ தெரிவிக்கப்பட்டுள்ள அனைவருக்கும் தேவையான அனைத்து உதவிகளையும் வழங்கிட முதல்வர் விஜய் உத்தரவிட்டுள்ளார்.



இதுவரை, தமிழ்நாட்டை சேர்ந்த 21 சுற்றுலாப் பயணிகள் மீட்கப்பட்டு, புதுடெல்லிக்கு அழைத்து வரப்பட்டு, பின்னர், அவர்களது சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இன்னும் தமிழ்நாட்டைச் சேர்ந்த 84 பயணிகள் குறித்த விவரங்கள் தொடர்ந்து தேடப்பட்டு வருகின்றன. இந்நிலையில், சில விவரங்களை https://udb.nepalpolice.gov.np/disaster என்ற தனது அதிகாரப்பூர்வ இணையதளத்தில் நேபாள காவல்துறை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பான விவரங்களை அறிய புதுடெல்லியில் உள்ள தமிழ்நாடு இல்லத்தின் கட்டுப்பாட்டு அறையை, 92895 16712 (Whatsapp / Call), 98685 30776 (Mobile No.) என்ற எண்களில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும், இது தொடர்பாக நேபாளத்துக்குச் செல்லும் உறவினர்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் வழங்கவும், சம்பந்தப்பட்ட அலுவலர்களுடன் ஒருங்கிணைந்து தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவும் முதல்வர் விஜய்யின் உத்தரவின்பேரில், தமிழ்நாடு அரசின் மூன்று அலுவலர்கள் கொண்ட குழு காத்மண்டுவில் முகாமிட்டுள்ளது.

ஏ. சத்திய சிவம் (Mob No. 9868207259), பி. தினேஷ் கண்ணன் (Mob No. 9868530799), எஸ். அஜய் (Mob No. 9868224049) ஆகிய மூன்று அலுவலர்கள் காத்மாண்டுவிலிருந்து தேவையான உதவிகளை ஒருங்கிணைக்கும் பணிகளை மேற்கொள்வார்கள்.

முதல்வர் விஜய் உத்தரவின்பேரில் தமிழ்நாடு அரசு அலுவலர்கள், நேபாள அரசு, இந்திய வெளியுறவு அமைச்சகம் மற்றும் காட்மண்டுவில் உள்ள இந்தியத் தூதரகம் ஆகியவற்றுடன் ஒருங்கிணைந்து, சாத்தியமான அனைத்து வழிகளிலும் இடைவிடாது நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள்," என்று தமிழக அரசின் அந்தச் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கொளத்தூரில் வி.எஸ்.பாபு வெற்றி செல்லாது என அறிவிக்கக் கோரி மு.க.ஸ்டாலின் தாக்கல் செய்த மனு: தீர்ப்பு தள்ளிவைப்பு

சென்னை: செப்.1-

கொளத்தூர் தொகுதியில் தவெக வேட்பாளர் வி.எஸ்.பாபு வெற்றி பெற்றது செல்லாது என அறிவிக்கக் கோரி, திமுக தலைவரும், முன்னாள் முதல்வருமான மு.க.ஸ்டாலின் தாக்கல் செய்த மனு மீதான தீர்ப்பை சென்னை உயர் நீதிமன்றம் தள்ளிவைத்துள்ளது.



நடந்து முடிந்த தமிழக சட்டமன்ற தேர்தலில் கொளத்தூர் தொகுதியில் தவெக வேட்பாளர் வி.எஸ் பாபு வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டார். இந்நிலையில், தொகுதியில் போட்டியிட்டு இரண்டாவது இடத்தை பிடித்த முன்னாள் முதல்வர் ஸ்டாலின் அளித்த விண்ணப்பத்தை ஏற்று, கொளத்தூர் தொகுதியில், 14 வாக்குப்பதிவு இயந்திரங்கள், ஓட்டுக்கு ஒப்புகைச் சீட்டு இயந்திரங்கள் சரிபார்க்கப்பட்டன.

அப்போது முறைகேடுகள் நடந்ததாகக் கூறி, முன்னாள் முதல்வரும், திமுக தலைவருமான மு.க.ஸ்டாலின் தரப்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த மனுவில், சரிபார்ப்புக்கு எடுக்கப்பட்ட சில வாக்குப்பதிவு இயந்திரங்கள், திடீரென கோளாறாகி நின்றுவிட்டன எனவும், ஆறு வாக்கு சாவடிகளில் வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் ஓட்டுக்கு ஒப்புகைச் சீட்டு இயந்திரங்களான வி.வி பேட் இயந்திரங்களை ஒப்பிட்டுப் பார்த்ததில் பல்வேறு முறைகேடுகள் கண்டறியப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முறைகேடுகள் நடந்துள்ளதால் அனைத்து வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வி.வி பேட் இயந்திரங்களை சரி பார்க்க உத்தரவிட வேண்டும் எனவும், தவெக எம்எல்ஏ - வி.எஸ்.பாபு வெற்றி பெற்றதை செல்லாது என அறிவிக்க வேண்டும். தன்னை வெற்றி பெற்றவராக அறிவிக்க வேண்டும் என்றும் மனுவில் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இந்த வழக்கு தலைமை நீதிபதி சுஷ்ருத் அரவிந்த் தர்மாதிகாரி மற்றும் நீதிபதி ஜி.அருள்முருகன் அமர்வில் விசாரணைக்கு வந்தது.

அப்போது, மு.க.ஸ்டாலின் தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் கபில் சிபல், வாக்குப்பதிவு இயந்திரங்கள், ஒப்புகைச் சீட்டு இயந்திரங்களை சரிபார்க்கக் கோரி, தேர்தல் முடிவுகள் வெளியான 3 நாட்களில், அதாவது மே.7-ம் தேதியே விண்ணப்பித்துள்ளதாகவும், ஆனால், தேர்தல் வழக்கு தாக்கல் செய்வதற்கான காலக்கெடுவான 45 நாட்களுக்கு பிறகே வாக்குப்பதிவு இயந்திரங்கள் சரிபார்க்கப்பட்டதால், இந்த வழக்கை தாக்கல் செய்வதை தவிர வேறு நிவாரணம் இல்லை," எனவும் வாதிட்டார்.

தேர்தல் ஆணையம் தரப்பில், "மனுவில் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகள் விசாரானைக்கு உகந்தவை அல்ல. எம்எல்ஏ-வின் வெற்றியை செல்லாது என அறிவிக்கக் கோரி தேர்தல் வழக்கு மட்டுமே தாக்கல் செய்ய முடியும். இந்த மனுவை விசாரணைக்கு ஏற்றுக் கொண்டால் இதே கோரிக்கையுடன் வழக்குகள் தாக்கல் செய்யப்படலாம் என்பதால், இந்த வழக்கை ஏற்கக் கூடாது," என வாதிடப்பட்டது.

இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள், மு.க ஸ்டாலுனின் மனு மீதான தீர்ப்பை தள்ளிவைத்தனர். மேலும், வாக்குப்பதிவு இயந்திரங்களை சரிபார்ப்பது தொடர்பான வழிகாட்டு நெறிமுறைகளை எதிர்த்த வழக்கில், 2025-ம் ஆண்டு அதில் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டதாக தேர்தல் ஆணையம் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டது. இதையடுத்து, இந்த வழக்கை திரும்பப் பெற்று, புதிய மனு தாக்கல் செய்ய ஸ்டாலின் தரப்பில் அனுமதி கோரப்பட்டது. இதை ஏற்று, வழக்கை திரும்பப் பெற நீதிபதிகள் அனுமதியளித்தனர்.

# தாம்பரம் தெற்கு பகுதி தேமுதிக சார்பில் கேப்டன் விஜயகாந்த் பிறந்தநாளை முன்னிட்டு அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி

தாம்பரம் செப்.1-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகர தெற்கு பகுதி தேமுதிக சார்பில், கட்சியின் நிறுவனத் தலைவர் கேப்டன் விஜயகாந்த் பிறந்தநாள் விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது அந்த வகையில் தாம்பரம் தெற்கு பகுதி தேமுதிக சார்பில் தெற்கு பகுதி கழகச் செயலாளர் கேட்.எம்.தர்மா அவர்கள் தலைமையில் தெற்கு பகுதி துணைச் செயலாளர் டி.ஏழுமலை, 63வது வட்ட செயலாளர் இ.குமார், 63வது மேற்கு வட்ட செயலாளர் தேன் என்கின்ற லட்சுமி காந்த் ஆகியோர் ஏற்பாட்டில் அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது



இதில் சிறப்பு அழைப்பாளராக செங்கல்பட்டு மாவட்ட கழக செயலாளர் அனகை டி.முருகேசன், மாவட்ட கழக துணை செயலாளர் மா.செழியன் ஆகியோர் கலந்துகொண்டு கேப்டன் விஜயகாந்த் அவர்களுடைய திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி தேமுதிக கழக கொடியேற்றி வைத்து பின்னர் பொதுமக்களுக்கு அறுசுவை உணவு பிரியாணி வழங்கினார்கள்

இந்த நிகழ்ச்சியில் மத்திய பகுதி துணைச் செயலாளர் சதிஷ், மாவட்ட பிரதிநிதிகள் பாலமுருகன், வீரப்பன், தெற்கு பகுதி மகளிர் அணி துணைச் செயலாளர் திலகா, தெற்கு பகுதி இளைஞரணி துணைச் செயலாளர் பி.சந்தோஷ் குமார், 62வது வட்டக் அவை தலைவர் காஜா மொய்தீன், வட்ட துணைச் செயலாளர் விக்கி, 47வது வட்ட செயலாளர் ராஜ்குமார், 63வது வட்ட துணை செயலாளர் அசோக்குமார், 63வது வட்ட அவை தலைவர் எம்.கே.பாபு, 63வது கிழக்கு வட்ட பொருளாளர் ஏழுமலை, 63வது வட்ட துணைச்செயலாளர் சரிதா, 63வது வட்ட துணைச் செயலாளர் எஸ்.முருகன், 63வது வட்ட இளைஞர் அணி செயலாளர் எஸ்.விஜயன் 63வது வட்ட பிரதிநிதி எஸ்.ஹரிகுமார், 63வது வட்ட பிரதிநிதி என்.கார்த்திக், மேற்கு பகுதி துணைச் செயலாளர் ரகு, 62வது வட்ட பிரதிநிதி சூர்யா, மற்றும் தெற்கு பகுதி கழக நிர்வாகிகள் வார்டு நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# நீலகிரி மாவட்டம் குன்னூர் அருகே உள்ள அட்டடி பகுதியில் முதியோர் இல்லத்திற்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா

நீலகிரி, செப்.1-


நீலகிரி மாவட்டம் குன்னூர் அட்டடி பகுதியில் சாரதாம்மாள் முதியோர் இல்லத்தில் சேலாஸ் எம், சி, பி, பிரதர்ஸ் கன்ஸ்ட்ரக்ஷன் நிறுவனத்தின் சார்பில் அதன் உரிமையாளர் அம்பிகாபதி-புனிதா ஆகியோர் குத்து விளக்கு ஏற்றினர் பின்னர் எம் சி பி பிரதர்ஸ் நிறுவனம் சார்பாக ரூ.ஒரு லட்சம் மதிப்பிலான கட்டில் மெத்தை மற்றும் அரிசி மளிகை பொருட்க்கள் உள்ளிட்ட முதியோர்கள் பயன்படுத்தும் முக்கிய பொருட்களை ஒப்படைக்கும் நிகழ்ச்சி நடந்தது.இதில் பாமக மாவட்ட தலைவர் அம்சா,செயலாளர் குணசேகரன்,மாநில நிர்வாகிகள் செந்தில்குமார், ஜான் லியோ, மகேஷ், உதகை பசுமை சதிஷ் உள்ளிட்ட கட்சி



நிர்வாகிகளும், முதியோர் இல்ல நிர்வாகிகளும் கலந்து கொண்டனர். முன்னதாக விழாவுக்கு வந்த அனைவரையும் நகர மன்ற அதிமுக உறுப்பினரும், மாவட்ட இளைஞரணி அமைப்பாளருமான குருமூர்த்தி வரவேற்று பேசினார்.



■ சென்னை, ஜாபர்கான்பேட்டை, ஆர்.வி நகரில் அமைந்துள்ள, அருள்மிகு கற்பக விநாயகர் ஆலய ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக பெருவிழா வெகு சிறப்பாக நடைபெற்றது. நிகழும் மங்களகரமான பராபவ வருடம் ஆவணி மாதம் 13ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை உத்திரட்டாதி நட்சத்திரம் த்ருதியை திதி அமிர்த யோகம் கூடிய சுபயோக சுபதினத்தில் துலா லக்னத்தில் அருள்மிகு கற்பக விநாயகர் ஆலயத்தில் அருணாசலேஸ்வரர் உண்ணாமலை அம்மன், பரிவார தேவதைகள் விமான கலசத்திற்கு மற்றும் மூலவருக்கும் மஹா கும்பாபிஷேகம் ஸ்ரீ கிருஷ்ணா குரூப் ஆஃப் கம்பெனிஸ் சேர்மன் & மேனேஜிங் டேரக்டர், மக்கள் சேவகர், டாக்டர் பி.சக்தீஸ்வரன் அவர்களது ஏற்பாட்டில் நடைபெற்றது. இவ்விழாவில் சாமி அலங்காரம், தீவாராதனை நடைபெற்றபின் அப்பகுதி வருகை தந்த பொது மக்களுக்கு அறுசுவை அன்னதானம் வழங்கப்பட்டது.



## காரணைப்புதுச்சேரியில்

# மறைந்த காரணை ஜெ.செல்வம் 30ஆம் நாள் நினைவு தினத்தை அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி

செங்கல்பட்டு செப்.1-

செங்கல்பட்டு மாவட்டம், காட்டாங்குளத்தூர் ஒன்றியம், காரணைப்புதுச்சேரி ஊராட்சி மறைந்த காரணை ஜெ.செல்வம் அவர்களின் 30ஆம் நாள் நினைவு தினத்தை முன்னிட்டு, 30.08.2026 ஞாயிற்றுக்கிழமை, காரணைப்புதுச்சேரி பெரியார் நகர் 14-வது தெருவில் அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை தமிழக வெற்றிக் கழகம் சார்பில், காரணைப்புதுச்சேரி பெரியார் நகர் 14-வது தெருவைச் சேர்ந்த எஸ்.கலா அவர்கள் சிறப்பாக செய்திருந்தார்.

நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக செங்கல்பட்டு சட்டமன்ற உறுப்பினரும், செங்கல்பட்டு மத்திய மாவட்ட கழகச் செயலாளருமான செள.தியாகராஜன் கலந்து கொண்டு, மறைந்த காரணை ஜெ.செல்வம் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். தொடர்ந்து பொதுமக்களுக்கு அறுசுவை உணவாக சிக்கன் பிரியாணி வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து, காரணைப்புதுச்சேரியைச் சேர்ந்த நிர்வாகிகள் மற்றும் பலர் தமிழக வெற்றிக் கழகத்தில் இணைந்தனர்.

இந்நிகழ்ச்சியில் ஒன்றிய நிர்வாகிகள் வினோத், டேவிட், சுரேந்தர், கோபி, அருள், நித்தியானந்தன், சார்லஸ், சரத் பாபு, அண்ணாமலை, வாலண்டைன் காட்ல, நந்தினி, புஷ்பா, ராஜ்குமார், அசோக், கே.பழனி தங்கம், எஸ்.சுதர்சன், ஜி.ராஜ்மோகன் -கோபாலபுரம் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், மகளிர் அணியினர் மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு, மறைந்த காரணை ஜெ.செல்வம் அவர்களுக்கு நினைவஞ்சலி செலுத்தினர்.



■ சென்னை, செங்கல்பட்டு மாவட்டம் சோழிங்கநல்லூர் வட்டத்திற்கு உட்பட்ட பள்ளிக்கரணை கிராமத்தில், துலுக்கானத்தம்மன் கோயில் பிரதான சாலையில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ தேவி துலுக்கானத்தம்மன் ஆலயம் 175 ஆண்டுகள் பழமை வாழ்ந்த கோயில் ஆகும். பராபவ வருடம் ஆவணி 13 ம் தேதி ஞாயிற்றுக்கிழமை ஸ்ரீதேவி துலுக்கானத்தம்மனுக்கு ஜிர்ணோத்தாரண அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக விழா வெகு சிறப்பாக நடைபெற்றது. ஆலய நிர்வாகிகள் ஊர் பொதுமக்கள் இளைஞர்கள் இணைந்து சிறப்பாக நடத்தினர்.

# கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 8 மாதங்களில் 239 பேருக்கு டெங்கு காய்ச்சல் பாதிப்பு கொசு ஒழிப்பு பணி தீவிரம்

கிருஷ்ணகிரி, செப்.1-

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 8 மாதங்களில் 239 பேருக்கு டெங்கு காய்ச்சல் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், கொசு ஒழிப்பு பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

தமிழகம் முழுவதும் பருவமழை போதிய அளவு பெய்யாவிட்டாலும் கொசு உற்பத்தி அதிகரித்து, அதன் மூலம் நோய் தாக்கமும் ஏற்பட்டு வருகிறது. குறிப்பாக டெங்கு காய்ச்சலும் ஆங்காங்கே பரவி வருகிறது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இந்த ஆண்டு கடந்த 8 மாதங்களில் 239 பேருக்கு டெங்கு பாதிப்பு கண்டறியப்பட்டு உள்ளது.

மேலும் வடகிழக்கு பருவமழை தொடங்கினால் இதன் தாக்கம் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதால் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகளை சுகாதாரத்துறையினர் தீவிரப்படுத்தி உள்ளனர்.

இது குறித்து சுகாதாரத்துறை அதிகாரிகள் கூறியதாவது:- கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கடந்த ஆண்டு 475 டெங்கு காய்ச்சல் பாதிப்பு பதிவாகி இருந்தது. இந்த ஆண்டில் இதுவரை 239 பாதிப்புகள் கண்டறியப்பட்டு உள்ளன. இதில் ஓசூர் மாநகராட்சியில் மட்டும் 98 பேருக்கு பாதிப்பு கண்டறியப்பட்டு உள்ளன. கொசுப்புழு ஒழிப்பு மற்றும் புகை மருந்து அடித்தல் பணிகளில் பணியாளர்களை ஈடுபடுத்துவதன் மூலம் பாதிப்புகளை குறைக்க மாவட்ட நிர்வாகம் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

ஏற்கனவே மாவட்டத்தில் உள்ள 10 வட்டாரங்கள், பேரூராட்சிகள், நகராட்சி மற்றும் மாநகராட்சிகளில் 483 கொசு ஒழிப்பு பணியாளர்கள் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களுக்கு டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டு உள்ளது. டெங்கு பாதிப்பு உறுதி செய்யப்பட்டால் சுயமாக மருந்து எடுத்து கொள்ள வேண்டாம். காய்ச்சல் அல்லது பிற அறிகுறிகள் தென்பட்டால் அருகில் உள்ள சுகாதார அதிகாரிகளை அணுக வேண்டும். மேலும் டெங்கு தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக பணியாளர்கள் தங்கள் வீடுகளுக்குள் நுழைவதை மக்கள் தடுக்கக்கூடாது. தண்ணீர் தொட்டிகள் மற்றும் பிற நீர் சேமிப்பு அமைப்புகளை மூடி வைக்க வேண்டும். மேலும், தண்ணீர் தேங்கி, கொசுக்கள் இனப்பெருக்கம் செய்யும் இடங்களாக மாறும் பயன்படுத்தப்படாத பாட்டில்கள் மற்றும் கொள்கலன்களை அப்புறப்படுத்த வேண்டும். இவ்வாறு அவர்கள் கூறினர்.



# வணிகர் சங்க பேரமைப்பின் ராணிப்பேட்டை மாவட்ட தலைவர் பொன். கு. சரவணன் பிறந்த நாளை முன்னிட்டு அன்னதானம்

ராணிப்பேட்டை செப்.1-

ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு மற்றும் அதனைச் சுற்றியுள்ள பல்வேறு பகுதிகளில் சுமார் 1000க்கும் மேற்பட்ட கோயில்களுக்கு கும்பாபிஷேக விழா நடத்திய அண்ணாமலையார் அறக்கட்டளை தலைவரும், வணிகர் சங்க பேரமைப்பின் ராணிப்பேட்டை மாவட்ட தலைவருமான பொன். கு. சரவணன் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு ஆற்காடு அடுத்த விளாபாக்கம் ஆரணி சாலையில் இயங்கி வரும் நேசம் முதியோர் இல்லத்தில் சுமார் 50க்கும் மேற்பட்ட நபர்களுக்கு அன்னதானம் வழங்கினார். இந்த அன்னதான நிகழ்ச்சியை ஆற்காடு டர்னிங் ஸ்ரீராம் இனிப்பகம் குடும்பத்தார் ராமமூர்த்தி_மலர்க்கொடி, பரசுராமன், பாலமுருகன் ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர். இதில் சிறப்பு அழைப்பாளராக சித்தஞ்சி சிவகாளி சித்தர் பீடம் தவத்திரு ஸ்ரீலஸ்ரீ மோகனானந்தா சுவாமிகள் கலந்து கொண்டு பொன். கு. சரவணன் அவர்களுக்கு கேக் வெட்டி, சால்வை, மாலை அணிவித்து வாழ்த்து தெரிவித்து அன்னதான நிகழ்ச்சியை துவக்கி வைத்து சிறப்பித்தார். இதில் ஜெய்மாருதி சரவணன், பிரஸ் முருகன், கலசம்பாலாஜி, யூ டிவி மதி, ரகு உள்ளிட்டோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். அதனைத் தொடர்ந்து ஆற்காடு தோப்புக்கான அருள்மிகு ஸ்ரீ கங்காதர ஈஸ்வரர் ஆலயத்தில் நடைபெற்ற அன்னதான நிகழ்ச்சியில் கலந்துகொண்டு ஏழை எளிய மக்களுக்கு அன்னதானம் வழங்கினார்கள்.

# கிருஷ்ணகிரி ராகவேந்திரா சுவாமிகளின் ம்ருத்திகா ப்ருந்தாவன திருக்கோயிலில் 355வது ஆராதனை விழா

கிருஷ்ணகிரி செப்,1-

கிருஷ்ணகிரி ராகவேந்திரா சுவாமிகளின் ம்ருத்திகா ப்ருந்தாவன திருக்கோயிலில் 355வது ஆரோதனை விழா நடந்தது.

கிருஷ்ணகிரி பழையபேட்டை ராகவேந்திர ஸ்வாமிகளின் ம்ருத்திகா ப்ருந்தாவன திருகோயிலில், 355வது ஆராதனை மஹோத்ஸவ விழா கடந்த 29ம் தேதி காலை கோ பூஜையுடன் துவங்கியது. தொடர்ந்து கலசஸ்தாபன ஹோமங்களுடன், நூதன ரத ப்ரதிஷ்டை, ஸ்வாமிகளின் விக்ரஹங்களுக்கு வெள்ளி கிரீடங்கள் சமர்ப்பணம், பஞ்சாமிர்த அபிஷேகம், லட்சார்ச்சனை, மஹா மங்களார்த்தி ஆகியவை நடந்தது.

நேற்று காலை, பஞ்சாமிர்த அபிஷேகம், ஸஹஸ்ர நாம அர்ச்சனை, ஓசூர் மஹன்யாஸ்ரீ குழுவினரின் பக்தி இசைக்கச்சேரியும், மஹா



மங்களார்த்தியும் நடந்தது. சிறப்பு அலங்காரத்தில் ஆஞ்சநேயருடன் ராகவேந்திரர் அருள் பாலித்தார். இதில் ஏராளமான பக்தகள் கலந்து கொண்டனர். அனைவருக்கும் அன்ன தானம் வழங்கப்பட்டன. மாலை 6 மணிக்கு, ராகவேந்திரர் ஸ்வாமிகளின் திருவுருவப்படம் திருவீதி உலா நடைபெற்றது. இன்று (31ம் தேதி) காலை பஞ்சாமிர்த அபிஷேகம், ராமநாம ஜெபம், லட்சார்ச்சனை, மஹா மஞ்களார்த்தி, தீர்த்த பிரசாதம் வழங்குதல் ஆகியவை நடக்க உள்ளது.



■ ஊத்துக்கோட்டையில் உரிமையியல் மற்றும் மாவட்ட குற்றவியல் நடுவர் நீதிமன்ற வளாகத்துக்குள் ஆர்ட்டிகள் 14 (சட்டத்தின் முன் அனைவரும்சமம்) என்ற பெயரில் வழக்கறிஞர்களின் புதிய அலுவலகத்தை மஹாவீர் தங்கமாளிகை குழுமத்தின் உரிமையாளர் கியான்சந்த்ஜெயின் திறந்து வைத்து வாழ்த்தினார் இந்நிகழ்வில் மூத்த வழக்கறிஞர்கள் மற்றும் இளம் வழக்கறிஞர்கள் கலந்து கொண்டு வாழ்த்தினார்கள்



■ செங்கல்பட்டு சட்டமன்ற உறுப்பினர் மத்திய மாவட்ட கழக செயலாளருமான செள.தியாகராஜன் முன்னிலையில் வேங்கடமங்கலம் ஊராட்சி மன்ற தலைவர் மகன் அன்புராஜ் 100 நபர்களுடன் அதிமுக வில் இருந்து விலகி த.வெ.க வில் இணைந்தார்.. உடன் ஊராட்சி மன்ற துணை தலைவர் எஸ்.சந்திரன், வார்டு உறுப்பினர் மஹிந்திரான்.மற்றும் கிளை கழக நிர்வாகிகள் நடராஜன், தீபாசெல்வம், மோகன், பிரபு, வெங்கடேஷ் என பலர் த.வெ.க வில் இணைந்தனர்

# நீலகிரி மாவட்டத்தில் கட்டணமில்லா மின்சாரம் வழங்கும் திட்டத்தின் கீழ் பயன் பெற்ற பயனாளிகள் முதல்வருக்கு நெஞ்சார்ந்த நன்றி

நீலகிரி மாவட்டத்தில் உள்ள உதகை, குன்னூர் மற்றும் கூடலூர் தமிழ்நாடு மின்பகிர்மான கழகத்தின் சார்பில் வீடுகளுக்கு 200 யூனிட் இலவச மின்சாரம் வழங்கும் திட்டத்தின் கீழ் மே 10 முதல் மின்நுகர்வோர்கள் பயனடைந்து வருகிறார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தேர்தல் அறிக்கையில் இடம் பெற்றுள்ள வாக்குறுதிகளை நிறைவேற்றும் வகையில் இரண்டு மாதங்களுக்கு 500 யூனிட்டுகள் வரை மின்சாரம் பயன்படுத்தும் வீட்டு மின்நுகர்வோர்களுக்கு இரண்டு மாதங்களுக்கு 200 யூனிட்டுகள் கட்டணமில்லா மின்சாரம் வழங்கப்படும். பெண்களிடையே நம்பிக்கையை ஏற்படுத்தவும். பெண்களின் பாதுகாப்பினை மேம்படுத்தவும் 'சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை" மாநிலம் முழுவதும் உருவாக்கப்பட்டு பெண்களின் பாதுகாப்பு தொடர்பான புகார்கள் மீது விரைந்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், தமிழ்நாட்டில் போதைப்பொருட்கள் தொடர்பான குற்றங்களைத் தடுத்து, கடுமையான நடவடிக்கைகளை எடுக்கும் பொருட்டு அனைத்து மாவட்டங்களிலும் போதைப்பொருட்கள் தடுப்புப்படை அமைக்கப்படும் என மூன்று முக்கிய கோப்புகளில் கையொப்பமிட்டார்கள்.

அதன்படி 10.05.2026 முதல் இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாடு அரசு, பொதுமக்களின் வாழ்க்கைச் செலவு உயர்வால் ஏற்படும் சுமையை குறைப்பதற்கும் பணவீக்கத்தின் தாக்கத்தை ஈடுசெய்வதற்கும் குடும்ப மின்நுகர்வோருக்கு இருமாதத்திற்கு 500 யூனிட் வரை மின்சாரம் பயன்படுத்தும் குடும்ப நுகர்வோருக்கு 200 யூனிட் வரை இலவச மின்சாரம் வழங்கப்படுகிறது. தகுதி



சரிபார்ப்பு மானியக்கணக்கீட்டு முறை மின்கட்டண உருவாக்கம் மற்றும் கணக்கியல் ஃஅறிக்கை தொடர்பான அம்சங்களில் தேவையான மாற்றங்கள் பில்லிங் மென்பொருளில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், நீலகிரி மாவட்டத்திலுள்ள உதகை மின்பகிர்மான கழகம் சார்பில் 54,436 மின் நுகர்வோர்களும், குன்னூர் மின்பகிர்மான கழகம் சார்பில் 86,152 மின் நுகர்வோர்களும் மற்றும் கூடலூர் மின்பகிர்மான கழகம் சார்பில் 54,436 மின் நுகர்வோர்களும் என மொத்தம் 1,95,024 மின் நுகர்வோர்கள் வீடுகளுக்கு 200 யூனிட் இலவச மின்சாரம் வழங்கும் திட்டத்தின் கீழ் பயன் பெற்று வருகின்றனர்.

நீலகிரி மாவட்டம் உதகை காந்தல் பகுதியை சேர்ந்த திருமதி.தேவி அவர்கள் தெரிவிக்கையில்:–

என் பெயர் தேவி. நான் உதகை காந்தல் பகுதியில் வசித்து வருகிறேன். எனக்கு 50 வயதாகிறது. எனக்கு ஒரு மகன் மற்றும் ஒரு மகள் உள்ளனர். நான் இப்பகுதியில் நீண்ட வருடங்களாக வாடகை வீட்டில் குடியிருந்து வருகிறேன். என் வீட்டிற்கு அருகில் உள்ள தனியார் உணவகத்தில் வேலை செய்து வருகிறேன். எனது குடும்பத்தின் அன்றாட செலவுகளை ஏழ்மையான சூழ்நிலையிலும் சமாளித்து வருகிறோம். இந்த நிலையில் எங்களது வாழ்க்கைச் செலவு உயர்வால் ஏற்படும் சுமையை குறைக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 200 யூனிட் கட்டணமில்லா மின்சாரம் வழங்கப்படும் எனஅறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். இதன் மூலம் இருமாதத்திற்கு 200 யூனிட் வரை கட்டணமில்லா மின்சாரம் எங்களை போன்ற குடும்பத்திற்கு மிகவும் உதவியாக இருக்கும்.

இத்திட்டத்தினை அறிவித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு



எனது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், ஏழை, எளிய மக்களின் அடிப்படைத் தேவையயை பூர்த்தி செய்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மக்கள் பணி சிறக்க வேண்டும் என தெரிவித்தார்.

நீலகிரி மாவட்டம் கொணவக்கரை பகுதியை சேர்ந்த திரு விசு அவர்கள் தெரிவிக்கையில்:–

என் பெயர் விசு. நான் கொணவக்கரை பகுதியில் வசித்து வருகிறேன். எனக்கு 50 வயதாகிறது. எனக்கு இரண்டு மகன்கள் உள்ளனர். நான் இப்பகுதியில் வாடகை வீட்டில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். எங்களது குழந்தைகள் கல்விச் செலவு மற்றும் குடும்ப அத்தியாவசியச் செலவுகளை சமாளித்து வரும் சூழ்நிலையில் வீட்டு மின்சார கட்டணம் கூடுதல் சுமையாக இருந்தது. இந்த நிலையில் எங்களது வாழ்க்கைச் செலவு உயர்வால் ஏற்படும் சுமையை குறைக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 200 யூனிட் கட்டணமில்லா மின்சாரம் வழங்கப்படும் என அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். இதன் மூலம் மின்கட்டண



செலவு வேறு அடிப்படை தேவைக்கு பயன்படும். இத்திட்டத்தின் மூலம் எங்களை போன்ற பொருளாதார ரீதியாக பின்தங்கிய மற்றும் நடுத்தர குடும்பத்திற்கு மிகவும் உதவியாக இருக்கும். இத்திட்டத்தினை அறிவித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன் என தெரிவித்தார்.

தொகுப்பு
**சு.பாலாஜி**
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
நீலகிரி மாவட்டம்



# சிவகங்கை அருகே பேருந்து வசதி வேண்டி மாவட்ட ஆட்சியரிடத்தில் மனுவளித்த திமுக இளைஞரணி கிங் கார்த்திக்

சிவகங்கை செப்,1–


சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் , மாவட்ட ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் , மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகங்கள் உள்ளிட்ட சிவகங்கை மாவட்ட ஒட்டுமொத்த அரசு பல்துறை அலுவலகங்கள் இயங்கும் இடத்திலிருந்து சுமார் இரண்டு கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ள அரசனேரி கீழமேடு , எம்ஜிஆர் நகர் , அரசனிப்பட்டி , சூரக்குளம் , பொன்னாம்பட்டி , ஆனைமாவலி , கருங்காலக்குடி ஆகிய கிராமங்களுக்கு அரசு பேருந்து சேவை வேண்டி சுமார் முப்பதுக்கும் மேற்பட்ட பொதுமக்களை திரட்டி சிவகங்கை திமுக இளைஞரணி மாவட்ட துணை அமைப்பாளர் கிங் கார்த்திக் தலைமையில் மாவட்ட ஆட்சியரிடத்தில் கோரிக்கை மனுவளித்தார்...

அப்போது அவர் கூறும்போது ஒக்கூர் வழியாக இயக்கப்படும் அரசு பேருந்து வழித்தடமான 7, 30 மற்றும் 31 ஆகிய பேருந்துகளை கருங்காலக்குடி , சூரக்குளம் , அரசனிப்பட்டி வழியாக குறைந்தது ஒருமுறையாவது இயக்க வேண்டுமெனவும் , பள்ளி செல்லும் மாணவர்கள் , தினசரி கூலிவேலைகளுக்கு செல்லும் கூலித்தொழிலாளர்கள் , மூத்த குடிமக்கள் என பலருக்கும் பயனுள்ளதாகவும் அமையும் எனத் தெரிவித்தார், மேலும் மாவட்ட நிர்வாகம் உடனடியாக விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென கேட்டுக்கொண்டார்.

# அரக்கோணத்தில் மேளதாளங்கள் முழங்க தனது 13 வது கிளையை ஈடன் குழுமம் பிரம்மாண்டமாய் துவங்கியது

ராணிப்பேட்டை, செப்,1–

ராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணம் ரயில் நிலையம் அருகில் மக்களின் நீண்ட கால கனவு புகைப்பட கலைஞர்களின் நீண்ட கால எதிர்பார்ப்பும் நினைவாக்கும் வகையில் தனது 13 வது கிளையை ஈடன் குழுமம் நிறுவனத் தலைவர் செல்வம் அவர்கள் தலைமையில் போதகர் ஜேக்கப் கோஷி கடற்படை வீரர் ஆரோன் இணைந்து ரிப்பன் வெட்டி திறந்து வைத்தனர். பொதுமக்கள் மற்றும் புகைப்பட கலைஞர்கள் தங்களுக்கு தேவையான ஆல்பம் பிரேம் மற்றும் போட்டோ கிப்ட் ஆகியவை தரமான முறையில் செய்து தரப்படும் புகைப்படக் கலைஞர்களின் போக்குவரத்து தூரத்தையும் மிச்சம் படுத்தும் வகையில் விரைவில் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது






இந்த திறப்பு விழாவில் ஈடன் குழுமத்தின் உறுப்பினர்களும் புகைப்படக் கலைஞர்களும் பொதுமக்களும் 500க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர் அரக்கோணத்தில் 13–வது கிளை ஈடன் குழுமம் தொடங்கி உள்ளதால் பொதுமக்கள் புகைப்பட கலைஞர்கள் மகிழ்ச்சி

# கிருஷ்ணகிரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நரம்பியல், இருதய அறுவை சிகிச்சை மையம் அமைக்க நடவடிக்கை அமைச்சர் அருண்ராஜ் தகவல்

கிருஷ்ணகிரி, செப்.01–

கிருஷ்ணகிரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நரம்பியல், இருதய அறுவை சிகிச்சை மையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் அருண்ராஜ் கூறினார்.

கிருஷ்ணகிரி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் மருத்துவம், மருத்துவ கல்வி மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர். அருண்ராஜ் நேற்று கலெக்டர் தினேஷ்குமார், எம்எல்ஏ.க்கள் முகுந்தன், இளையராஜா ஆகியோர் முன்னிலையில் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின் போது வெளி நோயாளிகள் பிரிவு, எலும்பு முறிவு அறுவை சிகிச்சை பிரிவு, ரத்த சுத்திகரிப்பு பிரிவு மற்றும் கழிவறை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளை பார்வையிட்டார்.

பின்னர் அமைச்சர் அருண்ராஜ் நிருபர்களிடம் கூறியதாவது: -முதல்-அமைச்சர் மக்களுக்கு தேவையான சிசிச்சைகளை



தரமான முறையில் வழங்க வேண்டும் என தெரிவித்து உள்ளார். மக்களின் தேவைகளை முழுமையாக நிறைவேற்றுவதில் மருத்துவ அலுவலர்களின் பங்கு முக்கியமானது. அரசின் நோக்கத்தை அறிந்து மக்களின் தேவைக்கேற்ப மருத்துவர்கள் சிகிச்சை அளிக்க வேண்டும்.

கிருஷ்ணகிரி அரசு மருத்துவ கல்லு£ரி மருத்துவமனையில் மேற்கொள்ளப்பட்டு வரும் சிகிச்சைகள் குறித்து கேட்டறிந்தோம். இப்பகுதி மக்கள் நரம்பியல் அறுவை சிகிச்சை மையம் அமைக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்து உள்ளனர். மேலும் கிருஷ்ணகிரி, ஓசூர் பகுதிகளில் அதிகமான விபத்துகள் ஏற்படும் போது விபத்தால் பாதிக்கப்பட்டவர்களை தர்மபுரி உள்ளிட்ட அரசு மருத்துவ கல்லூரிக்கு பரிந்துரை செய்யப்படுகிறது.

இதனை கருத்தில் கொண்டு உயர் சிகிச்சை சிறப்பு மருத்துவ பணியிடத்தை உருவாக்கி கிருஷ்ணகிரி அரசு மருத்துவ கல்லூரியில் புதிய நரம்பியல் அறுவை சிகிச்சை மையம் அமைக்கப்படும். அதேபோல இருதய சிகிச்சை இல்லாத நிலையில் இருதய அறுவை சிகிச்சை மையமும் அமைக்கப்படும்.

மேலும் மகப்பேறு மருத்துவமனை கிருஷ்ணகிரி நகராட்சியில் உள்ள பழைய மருத்துவ கல்லூரி வளாகத்தில் செயல்பட்டு வருவதால் ஒருங்கிணைந்த சிகிச்சை அளிக்க முடியாத நிலை உள்ளது. எனவே தற்போது உள்ள புதிய அரசு கல்லூரி மருத்துவமனை வளாகத்திலேயே அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும் பழைய மருத்துவ கல்லு£ரி மருத்துவமனை வளாகத்தில் வட்ட அளவிலான மருத்துவமனை உருவாக்க வேண்டும் என கோரிக்கை வைத்து உள்ளார்கள். முதல்-அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு சென்று அதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

இதனை தொடர்ந்து கிருஷ்ணகிரி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் செவிலியர் கல்லூரி மற்றும் விடுதி அமைப்பது குறித்து அமைச்சர் அருண்ராஜ் ஆலோசனை மேற்கொண்டார். இந்த ஆய்வின் போது கிருஷ்ணகிரி அரசு மருத்துவ கல்லூரி முதல்வர் டாக்டர். சத்யபாமா, மருத்துவமனை கண்காணிப்பாளர் (பொறுப்பு) மாரிமுத்து, உள்ளிருப்பு மருத்துவர் செல்வராஜ் மற்றும் டாக்டர்கள் உடன் இருந்தனர்.

# சட்டம், ஒழுங்கைக் காப்பாற்ற முடியாமல் கைகட்டி வேடிக்கை பார்க்கிறதா த.வெ.க., அரசு?

## டிடிவி தினகரன் கேள்வி

சென்னை, செப்.01–

கொலைக்களமாக மாறுகிறதா தமிழ்நாடு? சட்டம், ஒழுங்கைக் காப்பாற்ற முடியாமல் கைகட்டி வேடிக்கை பார்க்கிறதா தவெக அரசு? அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் கேள்வி எழுப்பியுள்ளார்வரலாற்று நூல்களைப் படித்தல்

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்;

பல்லாவரத்தில் விசிக நிர்வாகி வெட்டிக்கொலை, கூடங்குளம் அருகே ரவுடி தலை துண்டித்துக் கொலை, நெல்லை அருகே இளைஞர் படுகொலை, சேலம் அருகே பெண் துண்டு துண்டாக வெட்டி க்கொலை, கள்ளக்குறிச்சியில் தன் வயலுக்கு இரவு காவலுக்குச் சென்ற மூதாட்டி கொலை என, தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் அடுத்தடுத்து அரங்கேறியிருக்கும் படுகொலைச் சம்பவ ங்கள் சட்டம் ஒழுங்கை கேள்விகுரியா க்கியுள்ளதோடு, பொதுமக்களிடையே பெரும் அச்சத்தையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளன.

மக்களின் உயிருக்கும் உடைமைகளுக்கும் பாதுகாப்பு வழங்குவதே



அரசு நிர்வாகத்தின் அடிப்படைக் கடமை என்பதை மறந்து, ஆட்சிக்கு வந்து நூறு நாட்களைக் கடந்த நிலையில் இன்னும் கும்பகர்ணத் தூக்கத்திலேயே இருக்கும் தவெக அரசால், பொதுமக்கள் பொது வெளியில் சுதந்திரமாக நடமாடவே அச்சப்படும் அவலநிலை உருவாகியுள்ளது.

தமிழகத்தில் அன்றாடம் அரங்கேறும் குற்றச் சம்பவங்களைத் தடுத்து நிறுத்தி, சட்டம்ஒழுங்கை நிலைநாட்ட வேண்டிய முதலமைச்சர் ஜோசப் விஜய், சட்டமன்றத்தில் கேள்வி எழுப்பும் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு உரிய பதிலளிக்காமல் வேண்டுமென்றே சர்ச்சைகளை உருவாக்கி, அவையின் நேரத்தை வீணடிப்பதிலுமே கவனம் செலுத்தி வருவது வெட்கக்கேடானது.பயண வழிகாட்டி வாசித்தல்

எதிர்க்கட்சி உறுப்பினர்களின் கேள்வி களுக்கு அஞ்சி, தன் வசம் உள்ள நகராட்சி நிர்வாகம் மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறையின் மானியக் கோரிக்கைகளைக்கூட மற்ற அமைச்சர்களைத் தாக்கல் செய்யச் சொன்ன முதலமைச்சர் ஜோசப் விஜய், தற்போது சீரழிந்திருக்கும் சட்டம்ஒழுங்கு குறித்து எந்தவிதக் கவலையும் இல்லாமல் இருப்பதைப் பார்க்கும்போது, காவல்துறையையும் மற்றவர்களிடம் ஒப்படைத்துவிட்டாரோ என்ற சந்தேகம் எழுகிறது.

எனவே, கொலைச் சம்பவங்களில் தொடர்புடைய குற்ற வாளிகளை உடனடியாகக் கைது செய்து, சட்டப்படி கடுமையான தண்டனை பெற்றுத்தருவதோடு, தமிழகத்தில் அதலபாதாளத்திற்குச் சென்றிருக்கும் சட்டம்ஒழுங்கு நிலை குறித்து கூடுதல் கவனம் செலுத்தி, பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என முதலமைச்சர் ஜோசப் விஜய் அவர்களை வலியுறுத்துகிறேன். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

தேனி, செப்.01–

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் முதியோர் உதவித்தொகை, புதிய வீட்டுமனைப் பட்டா, வேலைவாய்ப்பு மற்றும் இதர மனுக்கள் என மொத்தம் 610 கோரிக்கை மனுக்களைப் பெற்றுக்கொண்ட மாவட்ட ஆட்சித்தலைவர் ,



பொதுமக்களின் கோரிக்கை மனுக்களை சம்பந்தப்பட்டத்துறை அலுவலர்களிடம் வழங்கி மனுக்கள் மீது குறித்த காலத்திற்குள் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டார். இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் ப.ராஜகுமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர். இராமகிருஷ்ணன், தனித்துணை ஆட்சியர். கவிதா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நிலஅளவை) கதிர்வேல் உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.





# குட்டி கிருஷ்ணர்ராதையராக மாறுவேடம் : பாபா மெட்ரிக் பள்ளியில் கோலாகல கிருஷ்ண ஜெயந்தி விழா

மானாமதுரை, செப்,01-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் உள்ள பாபா மெட்ரிக் பள்ளியில் கிருஷ்ண ஜெயந்தி விழா கோலாகலமாக நடைபெற்றது.

பள்ளி வளாகம் முழுவதும் மாணவ மாணவிகள் லிட்டில் கிருஷ்ணர் மற்றும் குட்டி ராதையர் வேடமணிந்து அனைவரின் கவனத்தையும் ஈர்த்தனர். பள்ளி நுழைவாயிலில் குழந்தைகளின் பாதம் பதித்து பூக்கள் தூவி வரவேற்பு அளிக்கப்பட்டது. தொடர்ந்து மாணவர்களின் நடனம் மற்றும் இசை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

பள்ளி நிறுவனர் இராஜேஸ்வரி அம்மா தலைமை தாங்கினார். பள்ளித் தாளாளர் கபிலன் தலைமையில் கோமாதாவுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. பள்ளி நிர்வாகி மீனாட்சி, போட்டிகளில் வெற்றி பெற்று முதல் மூன்று இடங்களைப் பிடித்த குழந்தைகளுக்கு பரிசுகளை வழங்கினார்.

குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்பட்ட குழந்தைகளுக்கும் முதல் மூன்று பரிசுகள் வழங்கப்பட்டன. சிறப்பாக கிருஷ்ணர் மற்றும் ராதையர் வேடமணிந்த மூன்று குழந்தைகளுக்கு சிறப்புப் பரிசுகள் வழங்கப்பட்டன. விழாவில் பங்கேற்ற அனைத்து குழந்தைகளுக்கும் நிச்சயப் பரிசுகள் அளிக்கப்பட்டன.

மானாமதுரை வைரம் லைன்ஸ் கிளப் தலைவர் கே.சுந்தரம், ஸ்டேட் வங்கி மானாமதுரை கிளை மேலாளர் எஸ்.ஹேம்நாத், கனரா வங்கி தலைமை மேலாளர் அபிஷேக் குமார் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.

பள்ளி முதல்வர் சாரதா விழா ஏற்பாடுகளை செய்திருந்தார். நிறைவில் பெற்றோர்கள் மற்றும் மாணவர்களுக்கு இனிப்புகள், பரிசுகள் வழங்கப்பட்டன.

குழந்தைகளுக்கு தமிழ்நாட்டின் பாரம்பரியம் மற்றும் விழாக்களின் சிறப்பை எடுத்துரைத்து, அவர்களை நல்வழிப்படுத்துவதே பாபா பள்ளியின் நோக்கம் என பள்ளி நிர்வாகம் தெரிவித்தது.





# வில்லியனூரில் நரிக்குறவர் மக்களுக்கு : ஏழை மக்கள் கழகம் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி

புதுச்சேரி, செப்.01-

புதுச்சேரி வில்லியனூர் தொகுதிக்குட்பட்ட ஒதியம்பட்டு பகுதியில் ஏழை மக்கள் கழகம் சார்பில் நரிக்குறவர் பழங்குடியின மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

ஏழை மக்கள் கழக நிறுவனர் தலைவர் பூக்கடை கமலக்கண்ணன் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், உணவு, உடைகள் மற்றும் குடிநீர் பாட்டில்கள் உள்ளிட்ட உதவிப் பொருட்கள் வழங்கப்பட்டன.



உதவும் இதயம் பேரியக்க நிறுவனர் கவிஞர் புதுவைக்குமார், ஏழை மக்கள் கழக மாநில அவைத் தலைவர் டாக்டர் சார்லஸ், ஆன்மிக அணித் தலைவி ஜெய்சாந்தி, ஊசுடு தொகுதித் தலைவர் ஜெயசங்கர், மாநில கொள்கைப் பரப்புச் செயலாளர் முத்தையன், மணவெளி தொகுதித் தலைவர் கலைச்செல்வன், வில்லியனூர் தொகுதித் தலைவர் ரமேஷ், மங்கலம் தொகுதித் தலைவர் தேவநாதன், மாநில மகளிர் அணி துணைச் செயலாளர் செண்பகவள்ளி உள்ளிட்டோர் கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கினர்.

உதவிகளைப் பெற்றுக் கொண்ட நரிக்குறவர் பழங்குடியின மக்கள், நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களுக்கு நன்றி தெரிவித்தனர். மக்கள் சேவைப் பணிகளில் இணைந்து செயல்பட விரும்புவோர் 99445 95267 என்ற எண்ணில் தொடர்புகொள்ளலாம் என பூக்கடை கமலக்கண்ணன் தெரிவித்தார்.

# மானாமதுரை அருகே அருள்மிகு சமயணசுவாமி கோவில், தோரடவாயில் குடமுழுக்கு விழா

## சூரக்குளம் , மணக்குளம் கொன்னக்குளம் , மேலக்கொன்னக்குளம் கிராம மக்கள் ஏற்பாடு

மானாமதுரை செப்.01-

சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டம், சூரக்குளம் , மணக்குளம் கொன்னக்குளம் , மேலக்கொன்னக்குளம் ஆகிய கிராமப் பொதுமக்களால் நடத்தப்படும் , சூரக்குளம் வயலில் எழுந்தருளி அருள்பாலித்துவரும் அருள்மிகு சமயன சுவாமி திருக்கோவில் மற்றும் தோரணவாயில் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக விழாவானது மிகவும் சிறப்பாக நடைபெற்றது... முதலில் சிவாச்சார்யார்கள் தோரணவாயிலின் கோபுரத்திற்கு வேத



மந்திரங்கள் முழங்கிட புனித நீரூற்றி குடமுழுக்கு செய்தனர்... பின்னர் சமயனசுவாமிக்கு சிறப்பு பூஜை புணஷ்காரங்களை நடத்தி குடமுழுக்கு விழா நடைபெற்றது... சிறப்பு அபிஷேக ஆராதணைகள் செய்யப்பட்டு பக்தர்களுக்கு அறுசுவை சைவ உணவு அன்னதானமாக வழங்கப்பட்டது... விழா ஏற்பாடுகளை சூரக்குளம் , கொன்னக்குளம் , மணக்குளம் , மேலக் கொன்னக்குளம் கிராமப் பொதுமக்கள் மிகவும் சிறப்பாக செய்திருந்தனர்.





# என்.ஆர். காங்கிரஸ் மாவட்டத் தலைவர் ராஜகோபாலுக்கு ஏழை மக்கள் கழகத்தினர் பிறந்தநாள் வாழ்த்து

புதுச்சேரி, செப்.01-

என்.ஆர். காங்கிரஸ் கட்சியின் மத்திய மாவட்டத் தலைவர் ஆர்.கே.டி. ராஜகோபாலின் பிறந்தநாள் விழா புதுச்சேரி முத்திரைப்பாளையத்தில் உள்ள அவரது அலுவலகத்தில் நடைபெற்றது.

விழாவில் ஏழை மக்கள் கழக நிறுவனர் தலைவர் பூக்கடை கமலக்கண்ணன் கலந்து கொண்டு ராஜகோபாலுக்கு பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்தார்.

உதவும் இதயம் பேரியக்க நிறுவனர் புதுவைக்குமார், மகளிர் முன்னேற்ற அமைப்புத் தலைவி அருள்பூசனி, அன்னை தெரசா மகளிர் மாற்றுத்திறனாளி அமைப்புத் தலைவி சுசிலாம்மாள், சமூக சேவகர்கள் என்.ஆர். ஏழுமலை, முருகன், கோட்டக்குப்பம் அக்பர் அலி, விஜயலட்சுமி உள்ளிட்டோர் வாழ்த்து தெரிவித்தனர்.

ஏழை மக்கள் கழகத்தின் ஊசுடு தொகுதித் தலைவர் ஜெயசங்கர், துணைச் செயலாளர் சுந்தராஜன், துணை அமைப்பாளர் ராஜாமணி, கொள்கைப் பரப்புச் செயலாளர் முத்தையன், வில்லியனூர் தொகுதித் தலைவர் ரமேஷ், மங்கலம் தொகுதித் தலைவர் தேவநாதன் உள்ளிட்ட நிர்வாகிகளும் பங்கேற்றனர்.

மக்கள் சேவைப் பணிகளில் மேலும் பலர் ஏழை மக்கள் கழகத்துடன் இணைந்து செயல்பட வேண்டும் என நிறுவனர் தலைவர் பூக்கடை கமலக்கண்ணன் அழைப்பு விடுத்தார். தொடர்புக்கு: 99445 95267.

# கிருட்டினகிரி மாவட்ட திராவிடர் கழகப் பொறுப்பாளர்கள் கலந்துரையாடல் கூட்டம்

கிருஷ்ணகிரி, செப்.1-

கிருட்டினகிரி மாவட்ட திராவிடர் கழகப் பொறுப்பாளர்கள் கலந்துரையாடல் கூட்டம் கிருட்டினகிரி பெரியார் மய்யம் மணியம்மையார் கூட்டரங்கில் மிகுந்த எழுச்சியுடன் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு மாவட்ட திராவிடர் கழகத் தலைவர் கோ.திராவிடமணி தலைமை வகித்து உரையாற்றினார்.

மாவட்ட செயலாளர் செ.பொன்முடி அனைவரையும் வரவேற்று பேசினார்.

மாவட்ட துணைத் தலைவர் வ.ஆறுமுகம், மாவட்ட ப.க. அமைப்பாளர் இராம.சகாதேவன், மாவட்ட தொழிலாளரணி தலைவர் சி.வெங்கடாசலம், மாவட்ட மகளிர் பாசறை தலைவர் மா.சிவசக்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் பகுத்தறிவாளர் கழக மாநில துணைப்பொதுச்செயலாளர் அண்ணா. சரவணன் கூட்டத்தின் நோக்கத்தினை விளக்கி பெரியார் பிறந்தநாள் விழாவினை கொள்கை பிரச்சார இன எழுச்சி விழாவாக வீடுதோறும், தெருதோறும், ஊர்தோறும் மாவட்டம் முழுவதும் சிறப்பாக கொண்டாடி வேண்டும் என்பதை எடுத்துக் கூறி உரையாற்றினார்.



கூட்டத்தில் திராவிடர் கழக மகளிரணி மாநில துணைச் செயலாளர் மு. இந்திராகாந்தி, பொதுக்குழு உறுப்பினர்கள் கி.முருகேசன், இல. ஆறுமுகம், மாநில மாணவரணி துணைச்செயலாளர் ச. மணிமொழி, மாவட்ட ப.க.செயலாளர் க.வெங்கடேசன், காவேரிப்பட்டணம் ஒன்றியத் தலைவர் பெ.செல்வம், நகர செயலாளர் அ.கோ.இராசா, மத்தூர் ஒன்றிய ப.க.தலைவர் மு.செயரட்சகன், மத்தூர் மகளிரணி நிர்வாகி ஜெ.பிரியா, மாவட்ட மாணவர் கழக நிர்வாகிகள் மா.ரூபிகாஸ்ரீ, ஜெ. குமிழி ஆகியோர்கள் கலந்துக்கொண்டு கருத்துக்கள் தெரிவித்தனர்.

நிறைவாக மாவட்ட கழக துணைச் செயலாளர் சி.சீனிவாசன் நன்றி கூறினார்.

கூட்டத்தில் நீட் ஒழிப்பு இருசக்கர வாகனப் பரப்புரை பிரச்சார பயணக்குழுவில் நான்கு நாட்களும் சிறப்பான வகையில் பங்கேற்ற ச.மணிமொழி, வ. ஆறுமுகம், ஜெ.குமிலி, இர. நிலவன் மற்றும் இரண்டு நாட்கள் பங்கேற்ற அண்ணா சரவணன் ஆகியோருக்கு மாவட்ட திராவிடர் கழகம் சார்பில் மாவட்டத் தலைவர் கோ.திராவிடமணி, மாவட்டச் செயலாளர் செ.பொன்முடி ஆகியோர் சால்வை அணிவித்து பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்தனர்.

கூட்டத்தில் மாநில ப.க.துணைப் பொதுச் செயலாளர் அண்ணா சரவணன் மாவட்ட ப.க.சார்பில் பேச்சு போட்டி நடத்த மாவட்ட ப.க. அமைப்பாளர் இராம. சகாதேவனிடம்ரூ1000/-மும் வழங்கினார். மேலும் மத்தூர் ஒன்றியத்தில் தந்தை பெரியார் 148 -ம் ஆண்டு பிறந்தநாளையொட்டி வருகின்ற 20/09/2026- அன்று மத்தூரில் (கழக குடும்பங்கள் சந்திப்பு ) குடும்ப விழா- நடைபெறும் நிகழ்விற்கு மாவட்ட துணைத் தலைவர் வ. ஆறுமுகத்திடம் ரூ4000/-மும் வழங்கினார்.

கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு.

தீர்மானம் 1.

உலக மனித நேய மாண்பாளர் அறிவுலக ஆசான் பகுத்தறிவுப்பகலவன் தந்தை பெரியார் 148 -ஆம் ஆண்டு பிறந்தநாள் விழாவினையொட்டி கிருட்டினகிரி கழக மாவட்டத்தில் உள்ள பெரியார் சிலைகளுக்கு மாலை அணிவித்தும், கிளைக் கழகங்கள் தோறும் அவரது படத்திற்கு மாலை அணிவித்தும், இனமான கழக இலட்சிய கொடியை ஏற்றியும், இல்லம்தோறும், தெருவெங்கும், ஊர்தோறும் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கியும் அய்யா பிறந்தநாள் விழாவினை மிகுந்த எழுச்சியுடன் சிறப்பாக கொண்டாடுவது என தீர்மானிக்கப்படுகிறது.

தீர்மானம் 2.

திராவிடர் கழகத்தின் கொள்கை பிரச்சார ஏடுகளான உலகின் ஒரே பகுத்தறிவு நாளேடு விடுதலை மற்றும் உண்மை, பெரியார் பிஞ்சு, தி மாடர்ன் ரேசனலிட் ஆகியவைகளின் பழைய சந்தாவை புதுப்பித்தும், புதிய சந்தா களை தொடர்ந்து திரட்டுவது எனவும் தீர்மானிக்கப்படுகிறது.

தீர்மானம் 3.

கிருட்டினகிரி மாவட்டம் கிருட்டினகிரி to தருமபுரி தேசிய நெடுஞ்சாலையில் அவதானப்பட்டி பனந்தோப்பு அருகாமையிலிருந்து டேம் ரோடு வரை சாலையில் இருபுறங்களிலும் மல்லி பூ விற்பனையால் போக்குவரத்திற்கு இடையூராக திடீரென வானங்களை நிறுத்தி மல்லி பூ விற்பனையாளர்களிடம் வாங்குவதால் விபத்துகள் ஏற்படுகிறது. அதேபோல டேம் ரோடு சர்வீஸ் சாலையிலிருந்து திம்மாபுரம் அரசு மேல்நிலைப்பள்ளி அருகாமையிலுள்ள சர்வீஸ் சாலையில் இருபுறம் உள்ள மீன்கடைகளால் போக்குவரத்திற்கு இடையூராக கனரக சரக்கு வாகனங்களை சர்வீஸ் சாலையில் நிறுத்தி வருகின்றனர். மேற்கண்ட பகுதிகளில் சாலை ஓரங்களில் நின்று பூவிற்பதையும், திம்மாபுரம் சாலையை ஒட்டிப்பகுதிகளில் மீன்கடை களாலும், தொடர் விபத்துகள் உயிர் தேங்கள் ஏற்படுகின்றது. வரத்திற்கு இரண்டு மூன்று விபத்துகள் ஏற்பட்டு உயிர் தேசங்கள் ஏற்படுகிறது, எனவே போர்கள அடிப்படையில் உயிர் சேதங்கள் ஏற்படுவதை தடுக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமாய் மாவட்ட நிர்வாகத்தையும், மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அவர்களையும் இம்மாவட்ட திராவிடர் கழகப் பொறுப்பாளர் கூட்டம் சார்பில் வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறது.

தீர்மானம் 4.

"நீட்" தேர்வையும், உயிர் ஜாதியினருக்கான EWS இடஒதுக்கீட்டை முழுமையாக இரத்துசெய்ய ஒன்றிய அரசை வலியுறுத்தி திராவிடர் கழக இளைஞரணி, மாணவரணி, மகளிர் பாசறை சார்பில் நடைபெற்ற மாபெரும் இருசக்கர வாகனப் பரப்புரை பிரச்சார பேரணியில் இரண்டாம் குழுவிற்கு கிருட்டினகிரி மாவட்டம் மத்தூர் ச.மணிமொழி தலைமை ஏற்று வழிநடத்த வாய்ப்பு வழங்கிய வணக்கத்திற்குரிய தமிழர் தலைவர் ஆசிரியர் அய்யா அவர்களுக்கு இம்மாவட்டக் கூட்டம் மிகுந்த நன்றியை தெரிவித்து கொள்கிறது, மேலும் இரண்டாம் குழுவில் கிருட்டினகிரி மாவட்டத்திலிருந்து சிறப்பாக பங்கேற்று செயலாற்றிய ச.மணிமொழி, வ.ஆறுமுகம், இர. நிலவன், ஜெ.குமிலி ஆகிய நால்வருக்கும் மற்றும் இரண்டாம் குழுவில் பங்கேற்ற அனைவருக்கும் இம்மாவட்டக் கூட்டம் பாராட்டுகலையும், வாழ்த்துகளையும் தெரிவித்து கொள்கிறது.

தீர்மானம் 5. நீட் ஒழிப்பு இருசக்கர வாகனப் பரப்புரை பிரச்சார பேரணிக்கு சிறப்பான வகையில் வரவேற்பு வழங்கிய மத்தூர், காவேரிப்பட்டணம் ஒன்றியங்களின் அனைத்து பொறுப்பாளர்களுக்கும், தோழர்களும் இம்மாவட்டக் கூட்டம் நன்றியை தெரிவித்து கொள்கிறது.

# மதுரையில் குடிநீர் விநியோகம் 2 நாட்கள் நிறுத்தம்

மதுரை, செப்.1-

மதுரை மாநகராட்சி அம்ருத் குடிநீர் திட்டத்தின் பிரதான குழாயில், சோழவந்தான் சாலை, திருவேடகம் கிராமத்தில் தொடக்க கூட்டுறவு அலுவலகம் அருகே குடிநீர் கசிவு ஏற்பட்டுள்ளது. இதனைச் சீரமைக்கும் பணி செப்.1-ம் தேதி நடைபெற உள்ளது. இதையொட்டி, கீழ்க்கண்ட வார்டு பகுதிகளில் செப்.1 மற்றும் 2 ஆகிய 2 நாட்கள் குடிநீர் விநியோகம் தற்காலிகமாக நிறுத்தப்படும் என மாநகராட்சி தெரிவித்துள்ளது. குடிநீர் விநியோகம் நிறுத்தப்படும் வார்டுகள்: 1, 2, 3, 4, 5, 6, 8, 9, 11, 13, 15 முதல் 20, 23 முதல் 35, 37 முதல் 39, 41 முதல் 43, 48, 71 முதல் 75, 78, 79 மற்றும் 80 முதல் 100 வரையிலான வார்டுகள். பொதுமக்கள் தேவையான அளவு குடிநீரை இருப்பில் வைத்துக்கொண்டு, சிக்கனமாக பயன்படுத்துமாறு மாநகராட்சி ஆணையாளர் கௌரவ் குமார், இ.ஆ.ப., கேட்டுக்கொண்டுள்ளார்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161